## மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
## க. பொ. த. (சா/தர)ப் பரீட்சை
## இரண்டாம் தவணை - 2017

| வரலாறு - I | 33 T I | ஒரு மணித்தியாலம் |
|---|---|---|

**அறிவுறுத்தல் :**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாத்தாளுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்
- 01 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3) , (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளிடியை (✕) இடுக.
- அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

01) இலங்கையின் வரலாற்றினைத் தொடர்ச்சியாகத் தருகின்ற வரலாற்று நூலான மகாவம்சத்தினை எழுதிய மகாநாமதேரர் வசித்த பிரிவேனா பின்வருவனவற்றுள் எது?
(1) திக்சந்த செனவியா பிரிவேனா
(2) பெப்பிலியானே பிரிவேனா
(3) சுனேத்திராதேவி பிரிவேனா
(4) காரகல பத்மாவதி பிரிவேனா

02) இலங்கையின் வரலாற்றினை அறிந்து கொள்வதற்கு சான்றாக விளங்குகின்ற போல்டியசின் இலங்கை வரலாறு என்ற நூலை எழுதியவர்
(1) ரிபைரோ
(2) பாகியன்தேரர்
(3) பிலிப்ஸ் பல்டியஸ்
(4) ரொபட்ரொக்ஸ்

03) புராதன காலத்தில் வாழ்ந்த மக்களின் சமூக வரலாறு, குடியேற்றங்களின் பரம்பல் போன்றவற்றினை அறிவதற்கு உதவுகின்ற சாசனம்
(1) ஓலைச்சுவடி
(2) களிமண் பொருட்கள்
(3) பாத்திரங்கள்
(4) கல்வெட்டுக்கள்

04) கோட்டை இராச்சியத்தின் ஆட்சியாளனாக இருந்த ஆறாம் புவனேகபாகுவிற்கு எதிராக பஸ்துன் கோறளைப் பகுதியில் ஏற்பட்ட சிங்கள கிளர்ச்சி அல்லது சிங்கள சங்கய தொடர்பாகக் குறிப்பிடும் கல்வெட்டு
(1) பதுளைதூண் கல்வெட்டு
(2) தெடிகம கல்வெட்டு
(3) மிகிந்தலைக் கல்வெட்டு
(4) கேகாலைத்தூண் கல்வெட்டு

05) நாடு ஒன்றின் பொருளாதார நிலை, வர்த்தகம், உலோகப் பாவனை போன்றவற்றினை அறிந்து கொள்வதற்கு உதவுகின்ற முக்கியமான மூலாதாரம்

(1) ஓலைச்சுவடிகள் (2) கல்வெட்டுக்கள்
(3) நாணயங்கள் (4) செப்பேடுகள்

06) கி. பி. 7 அல்லது 8 ஆம் நூற்றாண்டில் இசுறுமுனிய விகாரையில் செதுக்கப்பட்டுள்ள குதிரைத் தலையும் மனிதனும் என்ற செதுக்கலில் குதிரைத்தலை, மனிதத்தலை என்பன குறிக்கும் விடயங்கள் முறையே

(1) அக்கினித் தெய்வம், பர்ஜன் என்னும் தெய்வம்
(2) பர்ஜன் என்னும் தெய்வம், அக்கினித் தெய்வம்
(3) அக்கினித் தெய்வம், கல்வித் தெய்வம்
(4) அக்கினித் தெய்வம், இந்திரத் தெய்வம்

07) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் நத்தைகளை உணவாகப் பயன்படுத்திய மக்கள் வாழ்ந்த வலயம்

(1) தாழ்நில உலர் வலயம்
(2) தாழ்நில அதிவரல் வலயம்
(3) ஈரவலயம்
(4) மலைநாட்டு இடை உலர் வலயம்

08) 35,000 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த வரலாற்றுக்கு முற்பட்ட கால மனித சமூகத்தின் வாழிடமாக விளங்கிய பாகியன் கல குகை அமைந்துள்ள இடம்

(1) வெல்லே கங்கொட (2) மானியன்கம
(3) உடமல்ல (4) புளத்சிங்கள

09) வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் மரணச் சடங்கு முறைகள் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வதற்கு ஆதாரமான மனித எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்ட பிரதேசங்கள்

(1) கித்துள்கல பெலிவென, பெல்லன் பதிபெலஸ்ஸ, பாகியன்கல
(2) சிகிரியா அலிகல, மாந்தை, பாகியன்கல
(3) மாகம, அத்துனகல, கித்துள்கல பெலிலென
(4) பிதுருங்கல, இரணைமடு, இரத்தினபுரி

10) இலங்கையின் கற்காலத் தொழில்நுட்பம் பற்றிய விபரமான அறிவினைப் பெற்றுக் கொள்ள உதவுகின்ற கேத்திர கணிதப் பொறிமுறை உருவத்திலான நுணுக்கமான கல்லாயுதங்கள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கற்கள்

(1) கருங்கற் பாறை (2) பளிங்குப் பாறை
(3) சுண்ணாம்புக்கல் பாறை (5) அபதைட் பாறை

11) இரண்டாகப் பிளக்கும் வகையில் துளையிடப்பட்ட மண்டையோடு, வளைத்துப் புதைக்கப்பட்ட எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்ட குகைகள் முறையே

(1) இராவணஎல்ல குகை, குருவிட்ட பட்டதொம்பலென குகை
(2) பெலன்பதி பெலஸ்ஸ குகை, பாகியன்கல குகை
(3) சிகிரியா அலிகல, பிதுருங்கல
(4) இராவணஎல்ல குகை, பிதுருங்கல

12) கிராமத்தின் முக்கியம் வாய்ந்த அம்சமான குடும்பத்தினை பிரதிநிதித்துவப்படுத்திய குடும்ப தலைவன் பிராமிக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்ட முறை

(1) கமிக (2) கிராமிக (3) குர்ஹபதி (4) தொட்டபோஜக

13) வரலாற்று மூலாதாரங்களின் படி இலங்கையை ஆட்சி செய்த முதல் மன்னன்
(1) தேவசம்பியதீசன் (2) பண்டுகாபயன்
(3) துட்டகைமுனு (4) வசபன்

14) சங்கமித்தையால் கொண்டு வரப்பட்ட புனித வெள்ளிரசு மரக்கிளையை நடும் வைபவத்திற்கு மன்னன் தேவநம்பியதீசனால் பிரதேசத் தலைவர்கள் அழைக்கப்பட்டார்கள். அதில் இரு பிரதேசங்களைத் தரும் விடை எது?
(1) சந்தனகாமம், மகாகாம
(2) கதிர்காமம், மகாகாம
(3) மகாகாம, மிகிந்தலை
(4) கதிர்காமம், சந்தனகாமம்

15) யாழ் குடாநாடு நாகதீப (நகதிக) என அழைக்கப்பட்ட காலத்தில் இலங்கையை ஆட்சி செய்த மன்னன்
(1) வசபன் (2) வலகம்பா (3) துட்டகைமுனு (4) 1 ஆம் சேனன்

16) குட்டகண்ண அபய மன்னன் தன்னை வெளிப்படுத்தப் பயன்படுத்தி அரச கோட்பாடு
(1) சக்கரவர்த்தி எண்ணக்கரு
(2) தேவ எண்ணக்கரு
(3) பர்வதராஜ எண்ணக்கரு
(4) போதிசத்துவ எண்ணக்கரு

17) மருத்துவ குணமுடைய இலைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கஞ்சிக்கு வழங்கப்பட்ட பெயர்
(1) எம்புல்ஹம்பு (2) திலசங்குலிக்கா (3) அத்சுணு (4) நியம்பலாவ

18) குளங்களிலிருந்து வயலை நோக்கிவரும் சிறு வாய்க்கால்களில் மீன் பிடித்தல் தொடர்பாக அரசாங்கத்தால் அறவிடப்பட்ட வரி
(1) மாத்ரிக்க மத்சய பாகய
(2) கெதி அட
(3) கெடுகனக
(4) போஜக்கபதி

19) மேல்வரும் கூற்றுக்களைக் கவனிக்க.
✶ நாட்டினுள் பெருகிய வருமானத்தை நிர்வகிப்பதற்கான தேவை ஒன்று ஏற்பட்டதால் நிர்வாகப் பொறிமுறையொன்றின் அவசியம் உணரப்பட்டது.
✶ புதிய வர்த்தக தொடர்பு வலையமைப்பு உருவாதலும் அதனூடாக வியாபார நடவடிக்கைகள் விரிவடைதலும்.
மேற்படி கூற்றுக்களுடன் தொடர்புடைய நகரங்களின் தொகுதி
(1) யாப்பகூவ, தம்பதெனியா
(2) அனுராதபுரம், தம்பதெனியா
(3) குருநாகல், கோட்டை
(4) தம்பதெனியா, கோட்டை

20) மேல்வரும் வரலாற்று நிகழ்வுகளைக் கவனிக்குக.
A - உலகுடை தேவியின் மகனான ஜயபாகு ஆட்சிபீடம் ஏறுதல்
B - 1ம் புவனேகபாகு மன்னன் எகிப்திற்கு வர்த்தகத் தூதுக் குழுவை அனுப்பியமை
C - வீர அழகேஸ்வரன் சீனத்தளபதி செங்கோவில் கைது செய்யப்படல்
D - கொத்மலையில் இருந்த புனித தந்ததாதுவைக் கொண்டு பெலிகலையில் தலதாமாளிகை கட்டப்படல்
மேற்குறித்த வரலாற்று நிகழ்வுகளை அவை இடம்பெற்ற கால ஒழுங்கில் ஒழுங்குபடுத்துக.
(1) D, B, C, A (2) A, B, D, C (3) B, D, C, A (4) C, D, B, A

21) கண்டி இராச்சிய காலத்தில் விகாரைகளின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருந்தவர்கள்
(1) கடுபுள்ளே, ரட்டேரால
(2) கஜநாயக்க நிலமே, பத்வடனநிலமே
(3) மஹாநாயக்க, அனுநாயக்க
(4) ரட்டே மஹாத்தயா, உடகம்பா பிரதானி

22) கி .பி. 1619 இல் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயத் தளபதி
(1) கொன்ஸ்தாந்தினு தசா
(2) தொன் ஜெரோனி மோ த அசவேது
(3) ஜெரோ லோபேஸ்த சூசா
(4) பிலிப் த ஒலிவ்வோரா

❖ **மேல்வரும் அட்டவணையில் A தொடக்கம் I வரையில் தரப்பட்ட தகவல்களைக் கொண்டு 23 ஆம் 24 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

| ஆட்சிப் பிரதேசம் | ஆரம்ப காலப்பெயர் | மன்னனான பின் சூடிய பெயர் |
|---|---|---|
| A கண்டி | D சப்புமல்குமாரன் | G 8ம் வீரபராக்கிரமபாகு |
| B நான்கு கோறளை | E கோணப்புபண்டார | H 6ம் புவனேகபாகு |
| C கோட்டை | F அம்புலகலகுமாரன் | I 1ம் விமலதர்மசூரியன் |

23) சப்புமல்குமாரனுடன் தொடர்புடைய ஆட்சிப் பிரதேசத்தினையும் அவன் மன்னனான பின் சூடிக் கொண்ட பெயரையும் தரும் விடை
(1) C, H (2) B, G (3) A, J (4) C, J

24) முடி சூடிய பின் 8ம் வீரபராக்கிரமபாகு என பெயரை மாற்றிக் கொண்ட மன்னனின் ஆரம்பகாலப் பெயரையும், ஆட்சிப் பிரதேசத்தினையும் தரும் விடை எது?
(1) E, A (2) D, B (3) F, B (4) F, C

25) மாமனாருக்குப் பின் மருமகனுக்கு அல்லது அரசனின் சகோதரியின் மகனுக்கு என அரசு உரிமை முறைமையை மாற்றி அமைத்த இராசதானி
(1) கோட்டை (2) குருநாகல்
(3) யாப்பகூவ (4) கம்பளை

26) கீழே A தொடக்கம் F வரை தரப்பட்ட தகவல்கள் மேலைத்தேசத்தவரின் வருகையால் இலங்கைக் கலாசாரத்தில் கலந்த பண்புகளாகும். அப்பண்புகளைச் சரியாகக் காட்டும் விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.
A - உரோமன் கத்தோலிக்க சமயம்
B - தேசவழமைச்சட்டம்
C - திருமணப் பதிவு
D - இராஜகாரிய முறை
E - ஆயுள்வேத மருத்துவ சிகிச்சை
F - சர்வஜன வாக்குரிமை
(1) A, C, F (2) B, D, C (3) D, E, F (4) A, B, F

❖ **கீழே A தொடக்கம் D வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 27 ஆம், 28 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

A - கண்டி இராச்சியத்தில் காணியற்ற மக்கள் பிரிவு ஒன்று உருவானமை

B - தபால், தந்திச் சேவைகள் முன்னேற்றம் அடைந்தமை

C - மத்திய மலைநாட்டில் காடுகள் அழிக்கப்பட்டமை

D - பெருந்தெருக்களும் புகையிரதப் பாதைகளும் நிர்மாணிக்கப்பட்டமை

27) பிரித்தானியரின் ஆட்சியினால் இலங்கைக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்திய விடைகளின் சோடி

(1) B யும் C யும் (2) A யும் C யும் (3) B யும் C யும் (4) A யும் D யும்

28) தொடர்பாடல், போக்குவரத்து போன்ற துறைகள் வளர்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைத் தரும் விடை

(1) A யும் D யும் (2) B யும் C யும் (3) B யும் D யும் (4) C யும் D யும்

29) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் கண்டி இராச்சியத்தினை ஆட்சி செய்தபோது இலங்கைக்கு வருகை தந்த பிரித்தானிய தூதுவன்

(1) ஜோன்பைபஸ் (2) ஹியுபொயிட்
(3) ரொபட் அன்ட்றூஸ் (4) ஜோன் டொஸ்லி

30) இலங்கையில் சமய மறுமலர்ச்சி ஏற்பட்ட காலத்தில் துறவிகளையும், இல்லறத்தாரையும் ஒன்றுபடுத்தி உருவாக்கப்பட்ட அமைப்பு

(1) பௌத்த பிரம்மஞான சங்கம்
(2) பௌத்த பாடசாலைகளின் நிதியம்
(3) மெதடிஸ்த குருவானவர் சபை
(4) பௌத்த போதி சங்கம்

31) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையுடன் தொடர்புடைய சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - ஹெமீலியா வெஸ்டாக்ஸ்

B - போக்குவரத்து விருத்தியடைந்தமை

C - ஐரோப்பிய சந்தையில் கேள்வி அதிகரித்தமை

D - குறைந்த கூலிக்கு உழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டமை

E - உள்நாட்டு நுகர்வு அதிகரித்தமை

மேலே தரப்பட்ட கூற்றுக்களுள் கோப்பி உற்பத்தி அதிகரிக்கப்பட்டமைக்கான காரணத்தினையும் அது வீழ்ச்சியடைந்தமைக்கான காரணத்தையும் தரும் விடையைத் தெரிவு செய்க.

(1) D, E (2) A, B (3) C, A (4) A, E

32) டொனமூர் யாப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட நிர்வாகக் குழு முறையில் விவசாயமும் காணியும், கல்வி போன்ற குழுக்களுக்குத் தலைவராகவும் அத்துறைகளுக்கான அமைச்சராகவும் இருந்தவர்கள் முறையே

(1) D. S. சேனநாயக்கா, C. W. W. கன்னங்கரா
(2) கொல்வின் R. D சில்வா, N. M. பெரேரா
(3) C. W. W. கன்னங்கரா, N. M. பெரேரா
(4) வில்லியம் கோபல்லாவ, கொல்வின் R.D சில்வா

33) மறுமலர்ச்சிக் காலத்தில் கலைகளுக்கு அனுசரணை வழங்கிய இத்தாலியின் புளோரன்ஸ் நகரில் வாழ்ந்த செல்வந்த குடும்பம்

(1) டிசிமே குடும்பம் (2) காபொட் குடும்பம்
(3) மெடிசி குடும்பம் (4) லூர்ஸ் குடும்பம்

❖ கைத்தொழிற்புரட்சிக் காலத்தில் பல்வேறு கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டவர்களின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன. இதனை அவதானித்து 34 ஆம், 35 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

A - ஹம்பிறிடேவி
B - ஹாகிரீவ்ஸ்
C - ஆபிரகாம் டர்சி
D - ஜேம்ஸ்வோட்
E - கொறம்ப்டன்

34) மேலே பெயர் குறிப்பிட்டவர்களில் நெசவுத் துறையுடன் தொடர்புடையவர்களைக் குறிக்கும் விடைத் தொகுதி

(1) A, B (2) B, E (3) B, C (4) A, E

35) இரும்புருக்குத் துறையுடைய விபரங்களைத் தரும் விடைத்தொகுதி

(1) A, C, D (2) B, C, D (3) C, A, B (4) A, B, C

❖ பிரித்தானிய ஆளுனர்களின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றினைக் கொண்டு 36 ஆம், 37ஆம், 38 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A - எட்வேட்பாண்ஸ்
B - பிரட்டிக்நோர்த்
C - ஹென்றிவோர்ட்
D - வில்லியம் கிரகரி

36) கண்டி - கொழும்பு பிரதான வீதி அமைக்கப்பட்ட காலத்தில் இலங்கையில் இருந்த பிரித்தானிய ஆளுனர்

(1) D (2) B (3) C (4) A

37) கோப்பி விதைகளை விரித்தெடுக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஆளுனராக இருந்தவர்

(1) A (2) B (3) D (4) C

38) புகையிரத வீதிகளை அமைப்பதில் ஆர்வம் காட்டிய ஆளுநர்

(1) B (2) D (3) C (4) A

39) கைத்தொழில் மயமாக்கத்தின் காரணமாக விருத்தியுற்ற சமூக விளைவைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) நகரமயமாக்கம் விரைவுபடுத்தப்பட்டமை
(2) பொருட்கள், சேவைகளின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டமை
(3) வங்கிச்சேவை நடவடிக்கைகள் இலகுபடுத்தப்பட்டமை
(4) பல்தேசிய வர்த்தகம் விருத்தியடைந்தமை

40) 1797 இல் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தில் இடம்பெற்ற கலகத்திற்கான காரணங்களை ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைப்பதற்கு அனுப்பப்பட்ட குழுவின் தலைவர்

(1) கமறன் (2) மியூறன் (3) அசெவெடோ (4) பிரௌண்றிக்

**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்**

**க. பொ. த. (சா/தர)ப் பரீட்சை**

**இரண்டாம் தவணை - 2017**

| வரலாறு - II | 33 T II | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

**அறிவுறுத்தல் :**

- பகுதி I இன் முதலாம் வினா கட்டாயமானது.
- பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி - I

01) அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) மல்வத்து ஓயா, யான் ஓயா, மட்டக்களப்பு, மகாகம, கம்பளை, உடரஞ்சாமடம், நயினாதீவு, வல்லிபுரம், கலாவாவி, எலகரக் கால்வாய், கற்பிட்டி, சிகிரியா

(12 புள்ளி)

(ii) பர்மா, கம்போடியா, கெலிகட், மலாக்கா தொடுகடல், பம்பாய், பத்தேவியா(6 புள்ளி)

ஆ) மேல்வரும் $A, B, C, D$ ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்குமுறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A - நீர்நிலைகளில் வாழும் உயிரினங்களைக் கொல்லக்கூடாது எனச் சட்டமியற்றிய மன்னன்

B - தான் இறந்தபின் கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயருக்குச் சொந்தம் என மரணசாசனம் எழுதி வைத்த மன்னன்

C - இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி

D - நாடுகாண் பயணத்திற்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கிய போர்த்துக்கேய மன்னன்

✶ $A, B$ ஆகிய படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

1) (i) $A$ என்ற எழுத்தினால் குறித்துக் காட்டப்பட்ட நிர்மாணிப்பின் பெயரைத் தருக.

(ii) இதனைப் பொறிப்பித்த மன்னன் யார்?

(iii) மேற்படி நிர்மாணிப்புடன் தொடர்புடைய இராசதானியைப் பெயரிடுக.

(iv) மேற்படி நிர்மாணிப்பில் காணப்படும் உருவங்களில் ஒன்றின் பெயரைத் தருக.



படம் A


(4 புள்ளி)

2) (i) *B* என்ற எழுத்தினால் குறித்துக் காட்டப்பட்ட நிர்மாணிப்பின் பெயரைத் தருக.

(ii) மேற்படி நிர்மாணிப்பு பொறிக்கப்பட்ட காலத்தில் ஆட்சி செய்த மன்னன்

(iii) மேற்படி நிர்மாணிப்பு அமைந்துள்ள மாவட்டம்?

(iv) இந்நிர்மாணிப்பின் வாயிலில் உள்ள உருவம்? (4 புள்ளி)



படம் **B**

## பகுதி - II

02) (i) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதன் வாழ்ந்ததாகக் கருதப்படுகின்ற தாழ்நில ஈரவலயக் குகைகள் மூன்று தருக. (3 புள்ளி)

(ii) முன் வரலாற்றுக் கால மக்களிடம் காணப்பட்ட இரண்டு தொழில்நுட்ப விடயங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

(iii) வரலாற்றுக் காலக் குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய இரண்டு காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

(iv) ஆதி வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த மக்களுடைய உணவு பழக்கங்களை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளி)

03) (i) கீழே தரப்பட்ட கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் விடயங்களைத் தருக.

A - ஹேபிட்டிகம கல்வெட்டு

B - தோணிகல கல்வெட்டு

C - கொண்டவெட்டான் தூண்கல்வெட்டு (3 புள்ளி)

(ii) கீழே $A, B, C, D$ எனத் தரப்பட்டுள்ள சொற்கள் குறிக்கும் கருத்துக்களைத் தருக.

A - எல்லங்காவ

B - திலசங்குலிக்கா

C - சபா

D - வெஜ (4 புள்ளி)

(iii) புராதன கிராமங்களின் தலைவர்களாக விளங்கிய 'கமிக'வின் பணிகள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

(iv) பிரதேசத் தலைவர்களிடையே நல்லுறவை வளர்த்தெடுக்கும் தேவையை தேவநம்பியதீஸ மன்னன் உணர்த்திருந்தான் என்பதனை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளி)

04) (i) $A, B, C$ எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் கால்வாய்களை அமைத்த மன்னர்களின் பெயர்களை அதே ஒழுங்கு முறையில் தருக.

A - எலகரக் கால்வாய்

B - அங்கமடில்ல கால்வாய்

C - பப்பதன்ன கால்வாய் (3 புள்ளி)

(ii) பின்வரும் நதிக்கரையோரங்களில் அமைக்கப்பட்ட குளங்கள் ஒவ்வொன்று தருக.

1) மல்வத்து ஓயா

2) கனகராஜன் ஆறு

3) யான் ஓயா

4) கல்ஓயா (4 புள்ளி)

(iii) தாதுசேன மன்னன் நீர்பாசனத் துறையின் வளர்ச்சிக்கு மேற்கொண்ட பங்களிப்பினை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) குளம் ஒன்றின் பிரதானமான தொழில்நுட்பக் கூறுகளைக் குறிப்பிட்டு அவற்றில் மூன்றின் தொழிற்பாடுகளை விபரிக்குக. (6 புள்ளி)

05) (i) மேல்வரும் $A, B, C$ ஆகியவற்றினால் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுடன் தொடர்புடைய ஆட்சியாளர்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

A - சீனாவுடன் நெருக்கமான உறவினை ஏற்படுத்தியமை

B - சித்தாறும்பி புத்தநாயக்க என்னும் அதிகாரிக்கு வழங்கப்பட்ட பரிசுகள் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய பனாகடுவ செப்பு சாசனத்தைப் பொறிப்பித்தமை

C - அந்நிய ஆதிக்கத்திலிருந்து அநுராதபுர இராட்சியத்தை மீட்டெடுப்பதற்கு துட்டகைமுனு மன்னனுக்கு வழிகாட்டியமை (3 புள்ளி)

(ii) $A, B, C, D$ என்ற கூற்றுகளுக்குப் பொருத்தமான விடையை அதே ஒழுங்கில் உமது விடைத்தாளில் எழுதுக.

A - யாப்பகூவ மலைக்குன்றின் உச்சியில் கோட்டை கட்டியவன்

B - கோவிந்தமலையில் பாதுகாப்பு அரணை அமைத்தவன்

C - மினிப்பே பகுதியில் கோட்டை கட்டியவன்

D - தம்பதெனியாவைத் தலைநகராக்கியவன் (4 புள்ளி)

(iii) இரண்டாம் நகரமயமாக்க கால பொருளாதார நடவடிக்கை தொடர்பாக இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) 2 ஆம் பராக்கிரமபாகு மன்னனின் அரசியல் பணிகளை மூன்று காரணியின் அடிப்பிடையில் விளக்குக. (6 புள்ளி)

06) (i) A - கண்டி இராச்சியத்தின் அயலில் உள்ள பிரதேசங்களை ஒன்றுபடுத்தி முதல் முறையாக அரசொன்றை உருவாக்கியவன்.

B - சீதாவாக்கை மன்னனான மாயாதுன்னையுடன் நட்புறவுடன் இருந்த கண்டி ஆட்சியாளன்.

C - போர்த்துக்கேயருடன் உடன்பாடான கொள்கையைக் கடைப்பிடித்த கண்டி மன்னன்

ஆகியோரின் பெயர்களை $A, B, C$ என்ற ஒழுங்குமுறையில் எழுதுக. (3 புள்ளி)

(ii) கண்டி இராச்சியத்தில் விதிக்கப்பட்ட வரிகள் கீழே $A, B, C, D$ என்ற ஒழுங்குமுறையில் தரப்பட்டுள்ளது. அவ்வரிகள் தொடர்பான பதங்களை அதே ஒழங்கில் உமது விடைத்தாளில் எழுதுக.

A - படஹெல பத்த

B - மடிகே பத்த

C - குருவே பத்த

D - ஹெந்த பத்த (4 புள்ளி)

(iii) 2 ஆம் இராஜசிங்கன் போர்த்துக்கேயரை இலங்கையில் இருந்து வெளியேற்றுவதற்கு மேற்கொண்ட முயற்சிகளை இரு காரணியின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) கண்டி இராச்சியத்தின் நிர்வாகக் கட்டமைப்பின் தன்மையை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளி)

07) (i) இலங்கையை ஆட்சி செய்த மேலைத்தேச நாடுகளுடைய தலைநகரங்களை $A, B, C$ என்ற ஒழுங்குமுறையில் தருக.

A - போர்த்துக்கல்

B - ஒல்லாந்து

C - பிரித்தானியா (3 புள்ளி)

(ii) பிரித்தானியர் இலங்கைமீது கவனம் செலுத்துவதற்குக் காரணமாக அமைந்த இரு விடயங்களைத் தருக. *(4 புள்ளி)*

(iii) a) *1803* கண்டி மீது படையெடுத்த பிரித்தானிய தளபதி *(1 புள்ளி)*

b) அக் காலத்தில் கண்டியை ஆட்சி செய்த மன்னன் *(1 புள்ளி)*

c) படையெடுப்பு தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் மூன்று குறிப்பிட்டு விளக்குக. *(3 புள்ளி)*

(iv) *1848* இரண்டாம் சுதந்திரப் போராட்டம் ஆரம்பமாவதற்குப் பங்களிப்புச் செய்த மூன்று காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக. *(6 புள்ளி)*

## பகுதி - III

08) (i) மறுமலர்ச்சிக் காலத்தில் பின்வருவனவற்றைக் கண்டுபிடித்தவர்களின் பெயர்களை $A, B, C$ என்ற ஒழுங்குமுறையில் உமது விடைத்தாளில் எழுதுக.

A - தொலைநோக்கி

B - குருதிச்சுற்றோட்டம்

C - அச்சு இயந்திரம் *(3 புள்ளி)*

(ii) புதிய வர்த்தகப் பாதையைக் கண்டுபிடிப்பதில் ஆர்வம் செலுத்தியவர்களின் பெயர்கள் $A, B, C, D$ என்ற ஒழுங்கில் கீழே தரப்பட்டுள்ளது. அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பிரதேசங்களைத் தருக.

A - வாஸ்கொடகாமா

B - பத்தலோமியஸ் டயஸ்

C - பேர்டினன் மகலன்

D - கிறிஸ்தோபர் கொலம்பஸ் *(4 புள்ளி)*

(iii) அரசியலில் ஏற்பட்ட மறுமலர்ச்சி விடயங்களை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(5 புள்ளி)*

(iv) மறுமலர்ச்சி இலங்கை மீது ஏற்படுத்திய தாக்கத்தினை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(6 புள்ளி)*


09) (i) *18* ஆம் நூற்றாண்டில் குடியேற்ற நாடுகளைக் கொண்டிருந்த பிரித்தானியா தவிர்ந்த மூன்று ஐரோப்பிய நாடுகளைத் தருக. *(3 புள்ளி)*


(ii) கைத்தொழிற்புரட்சி பிரித்தானியாவில் ஏற்பட்டமைக்கான காரணங்கள் நான்கு தருக. *(4 புள்ளி)*

(iii) கைத்தொழிற்புரட்சி பொருளாதாரத்துறையில் ஏற்படுத்திய மாற்றங்களை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(5 புள்ளி)*

(iv) கைத்தொழிற்புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகளை மூன்று காரணியின் அடிப்படையில் விபரிக்குக. *(6 புள்ளி)*

The National e-Learning Portal for The General Education






The National e-learning Portal for The General Education